# சி.வி.சண்முகம் எம்எல்ஏ வெற்றிக்கு எதிரான தேர்தல் வழக்கு தள்ளுபடி

**சென்னை, அக். 13:** மயிலம் தொகுதி அதிமுக எம்எல்ஏ சி.வி. சண்முகத்துக்கு எதிரான தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், மயிலம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் 30,041 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரது வெற்றியைச் செல்லாது என அறிவிக்கக் கோரி, அந்தத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளரான கமலக்கண்ணன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் தேர்தல் வழக்கு தாக்கல் செய்தார்.

தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி, சி.வி. சண்முகம் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில், செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரிய சி.வி.சண்முகத்தின் மனுவை ஏற்று, அவரது வெற்றியை எதிர்த்துத் தொடரப்பட்ட தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# பள்ளிகளில் 5 நாள்கள் கட்டாய உடற்கல்விப் பாடவேளை

## திருத்தப்பட்ட கால அட்டவணை வெளியீடு



பள்ளிக் கல்வித் துறை சார்பில் திருத்திய கால அட்டவணையை செவ்வாய்க்கிழமை வெளியிட்ட துறையின் அமைச்சர் ராஜ்மோகன். உடன், துறையின் செயலர் இன்னசென்ட் திவ்யா உள்ளிட்டோர்.

**சென்னை, அக். 13:** அனைத்துப் பள்ளிகளுக்கும் திருத்தப்பட்ட கால அட்டவணையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் செவ்வாய்க்கிழமை வெளியிட்டார்.

முதல்வர் விருப்பப்படி வாரத்தில் 5 நாள்கள் உடற்கல்வி பாட நேரம் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜ்மோகன் தலைமையில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்துக்கு இடையே அமைச்சர் ராஜ்மோகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முன்னர், வாரத்தில் 3 நாள்கள் உடற்கல்விப் பாடவேளைகளாகவும், தேவைப்பட்டால் 2 நாள்கள் பிற பாடவேளைகளாகவும் இருந்து வருகிறது. முதல்வரின் உத்தரவுப்படி இனி வாரத்தில் 5 நாள்கள் உடற்கல்விப் பாடவேளைகளாக கட்டாயம் இருக்கும். இந்தப் பாடவேளைகளை எந்த ஆசிரியரும் வேறு பாடங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

மாணவ, மாணவிகளை இவர் விளையாடுபவர், இவர் விளையாடமாட்டார் என ஒதுக்கிவைக்கக் கூடாது. அனைத்து மாணவ, மாணவிகளையும் விளையாட அனுமதிக்க வேண்டும். ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெறும் கனவில் தமிழகம் இருக்கிறது. அந்தப் பதக்கத்தை தமிழக பள்ளிக் கல்வி மைதானத்தில் இருந்து கொண்டுவரவேண்டும். விளையாட்டு மைதானங்கள் இல்லாத பள்ளிகளுக்கு அதற்கான வசதிகளும், இருக்கும் விளையாட்டு மைதானங்களை அத்துறை மூலம் அதிநவீனமாகவும் மாற்றித் தரப்படும்.

காலத்துக்கேற்ப பாடத்திட்டங்களை மாற்ற வேண்டும். அதேபோல், பாதுகாப்பான வகுப்பறைகள், உணவு அருந்தும் அறைகள் மற்றும் கழிப்பறைகளையும் மேம்படுத்த வேண்டும். உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் 6,000 இருக்கின்றன. இதில் 2,000-க்கும் மேற்பட்ட இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டிருந்தன.

தவெக ஆட்சிக்கு வந்த பிறகு, ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் கூட காலியாக இருக்கக் கூடாது என ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்படும்.

பள்ளிக் கல்வித் துறை இயக்குநர், மாவட்ட கல்வி அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளது. தலைமையோடு கலந்து பேசி விரைவில் காலியாக இருக்கும் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றார்.

பள்ளிக் கல்வித் துறைச் செயலர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, தொடக்கக் கல்வி இயக்குநர் நரேஷ், அரசு தேர்வுகள் இயக்குநர் சுகன்யா உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

# சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 2 கூடுதல் நீதிபதிகள் நியமனம்

**சென்னை, அக். 13:** சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 2 கூடுதல் நீதிபதிகளை நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.



நீதிபதி டி.லிங்கேஸ்வரன்



நீதிபதி பி.கார்த்திகேயன்

மாவட்ட நீதிபதிகளான டி.லிங்கேஸ்வரன் மற்றும் பி.கார்த்திகேயன் ஆகியோரை, உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க சென்னை உயர்நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையை உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிசீலித்து, இருவரையும் உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க, குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர், இருவரையும் உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக நியமிக்க உத்தரவிட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இருவரும் விரைவில் சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக பதவி ஏற்கவுள்ளனர். இதன் மூலம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 67-ஆக உயர்ந்துள்ளது. 8 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன.

**நீதிபதி டி.லிங்கேஸ்வரன்:** கடந்த 1974-ஆம் ஆண்டு மே 10-ஆம் தேதி, திருநெல்வேலி மாவட்டம் முதுமொத்தன்மொழி கிராமத்தில் பிறந்தவர். சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்து, 2000-ஆம் ஆண்டு வழக்குரைஞராகப் பதிவு செய்தார். 2013-ஆம் ஆண்டு மாவட்ட நீதிபதி தேர்வில் வெற்றி பெற்று, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மாவட்ட நீதிபதியாக பணியாற்றி உள்ளார்.

**நீதிபதி பி.கார்த்திகேயன்:** கடந்த 1973 டிச.9-ஆம் தேதி பிறந்த இவர், 1996-ஆம் ஆண்டு சட்டப்படிப்பை முடித்து வழக்குரைஞராக பதிவு செய்தார். 2013-ஆம் ஆண்டு மாவட்ட நீதிபதி தேர்வில் வெற்றி பெற்ற இவர், தருமபுரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியுள்ளார். தமிழ்நாடு சட்டத் துறைச் செயலராகவும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

# வியாபாரியிடம் இணையவழியில் ரூ. 4.98 லட்சம் மோசடி

**திருச்சி, அக். 13:** திருச்சியில் வியாபாரியிடம் இணையவழியில் ரூ.4.98 லட்சம் மோசடி செய்த சம்பவம் தொடர்பாக போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

திருச்சி வயலூர் சாலையைச் சேர்ந்தவர் ஜோ பிராங்க் சுரேந்திரன் (46). எம்பிஏ படித்து வரும் இவர், சொந்தமாக பாக்குமட்டை தட்டு உற்பத்தி செய்யும் கூடம் நடத்தி வருகிறார். இவர், கடந்த 9-ஆம் தேதி வயலூர் சாலையில் உள்ள தனியார் வங்கி ஏடிஎம் மையத்தில் பணம் எடுத்துள்ளார்.

அந்தப் பணிப் பரிவர்த்தனைக்காக சிறிதுநேரம் கழித்து, அவரது கைப்பேசியின் கட்செவி அஞ்சலுக்கு குறுஞ்செய்தி வந்துள்ளது. அதில், ஏடிஎம் இயந்திரத்திலிருந்து பணம் எடுத்துள்ளீர்களா? என்ற கேள்வி இடம் பெற்றிருந்தது. இதை படித்துப்பார்த்த அவர், ஆம் என்று பதிலை பதிவு செய்து மீண்டும் அதே எண்ணுக்கு அனுப்பியுள்ளார்.

இந்த நடவடிக்கை முடிந்த விநாடியே அவரது வங்கிக் கணக்கிலிருந்து 4 லட்சத்து 98 ஆயிரத்து 833 ரூபாய் எடுக்கப்பட்டதாக தகவல் வந்துள்ளது. இதனால், அதிர்ச்சியடைந்தவர் தனது வங்கி கணக்கு விவரங்களை மீண்டும் சரிபார்த்தபோது, பணம் எடுக்கப்பட்டது உறுதியானது.

சம்பவம் தொடர்பாக வங்கி நிர்வாகத்திடம் அவர் தகவல் தெரிவித்தார். வங்கி அலுவலர்கள் அளித்த அறிவுரையின்படி, உடனடியாக இணைய வழி மோசடி தொடர்பாக இணையத்திலேயே புகார் அளித்தார். இணையத்தில் பெறப்பட்ட இந்தப் புகார், திருச்சி சைபர் குற்றப் பிரிவு போலீஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

புகாரைப் பெற்ற போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


**SBI** பாரத ஸ்டேட் பாங்க், திருச்செங்கோடு கிளை (00968)
100 SSD ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் - 637211
போன் : 9443361127, மின்னஞ்சல் : sbi.00968@sbi.co.in

**தங்க நகை ஏல அறிவிப்பு**

எமது வங்கிக் கிளையிலிருந்து நகைக் கடன் பெற்ற கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள், தவணைக்காலம் கடந்தும் நீண்ட நாட்களாக நிலுவைக்கு தொகை எதுவும் செலுத்தவில்லை. தபால் மூலமாக நோட்டீஸ் அனுப்பிய பின்னரும் அவரோ அல்லது அவர் தம் சட்டபூர்வ வாரிசுதாரர்களோ (யாரேனுமிருப்பின் அவர்கள்) நகைகளை திரும்ப எடுக்கவில்லை. எனவே இந்த அறிவிப்பின் பின்னர் கடன்தாரரோ அன்றி அவரது சட்டபூர்வ வாரிசுதாரர்கள் (யாரேனுமிருப்பின் அவர்கள்) அசல், வட்டி மற்றும் பிற செலவினங்களுடனான நிலுவையை செலுத்தி அவர்களது நகைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் கடனிற்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவர்கள் செலவிலேயே **28.10.2026 (புதன்கிழமை), மாலை 4.00 மணியளவில் திருச்செங்கோடு கிளையில்** வைத்து பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலத்தொகை கடன் தொகைக்கு ஈடாக இல்லையெனில் மீதியுள்ள தொகைக்கு கடன்தாரர்கள் செலவிலேயே சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். நகைகளை விற்று கிடைக்கும் தொகையில் கடன் கணக்கிற்குப் போக மீதி இருந்தால் அவரின் பிற கடன் கணக்கிற்கோ அல்லது அவர் உத்தரவாதம் அளித்த கடன்களுக்கோ சரி செய்யப்படும். இந்த ஏலத்தேதியை மாற்றவோ, ரத்து செய்யவோ, ஒத்திப்போடவோ கிளை மேலாளருக்கு அதிகாரம் உண்டு என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். ஏல நிபந்தனைகளை வங்கி அறிவிப்பு பலகையில் காணலாம். ஏலம் எடுக்க வருபவர்கள் ரூ.10,000/- முன்வைப்புத் தொகையை வங்கி வரைவோலையாக முன்கூட்டியே செலுத்த வேண்டும்.

| கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி / கணக்கு எண் | நிலுவைத் தொகை (13-10-2026 வரை) / மொத்த எடை கிராமில் |
|---|---|
| 1.திரு. சசிக்குமார், த/பெ.பெருமாள், 3/297, சுப்புராயா நகர், T.கைலாசம்பாளையம், திருச்செங்கோடு – 637 209 கணக்கு எண்.43455118223 | ரூ.66,200/– ; 12.08 |
| 2.திரு.விக்னேஷ். S, த/பெ.சம்பத், 3/104, அருந்ததியர் வீதி, கோனூர், நாமக்கல் – 637 201 கணக்கு எண்.40504934826 | ரூ.99,536/– ; 20.40 |
| 3.திரு.வெங்கடேஷ். P, த/பெ.பழனியப்பன், கதவு எண். M34, கூட்டப்பள்ளி காலனி, திருச்செங்கோடு, நாமக்கல் – 637 214 கணக்கு எண்.44004032714 | ரூ.6,16,000/– ; 94.22 |

இடம் : திருச்செங்கோடு
தேதி : 13.10.2026
அதிகாரம் பெற்ற அதிகாரி, திருச்செங்கோடு கிளை



**IDBI BANK**
ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில், டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

**அசையாச் சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **ரூ.203,24,92,217/– (01.09.2026 தேதி அன்று)** தொகையை **M/s. வெங்கட்ராயர் சாகோ ஃபேக்டரி மற்றும் M/s. K.வெங்கட்ராமன் & கோ.** என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, **அடையாள/கொள்நிலை சுவாதீனம் (Symbolic/Physical Possession)** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, **25.11.2026** தேதியில் **(காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை)** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு'** என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.33,19,00,000/–** மற்றும் முன்வைப்புத் தொகை : **ரூ.3,31,90,000/–.**

**அசையாச் சொத்து விபரம்**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுகா, காக்காவேரி கிராமம், சர்வே எண்.273/1, 273/2, 272/5, 273/3B2 ல், "கணபதி நகர்" லேஅவுட்டிலுள்ள மனை எண்.No.3, 4, 5, 8, 9, 10, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 22, 23, 24, 25, 26, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 43, 46, 48, 49, 50, 51, 129, 275/1, 275/2, 272/3, 272/2B, 272/2A, 272/4B, 272/6A, 254/1C1, 254/1C3, 253/3F, 273/3A2, 276/1A, 276/2A3B, 276/1B, 274/1A1B, 273/3A2, 274/3, 272/4, 274/1A1B2, 255/5, 254/2C3B, 255/2, 255/4, 257/4A, 272/1A, 272/1B, 254/2D, 255/6, 272/1B, 276/2B4A, 276/2B4C, 276/2B4, 254/2C3A, 254/2C1, 255/3B, 274/1A1A, 273/3A2 மற்றும் 273/3B4ல் உள்ள மொத்தம் 33.10 ஏக்கர் நிலமான, தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டிடம், திரு. வெங்கட்ராமன்.K, திரு. தினேஷ்குமார்.V மற்றும் திருமதி. V. பிரபாவதி ஆகியோரின் பெயரிலமைந்த சொத்து.

**விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தின் 'லிங்க்'கில் பார்வையிடலாம்.**

தேதி : 07.10.2026
இடம் : கோயம்புத்தூர்
ஒம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்



**SBI** பாரத ஸ்டேட் பாங்கு
ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளை :
377/1, டாக்டர் நஞ்சப்பா ரோடு, N.S.பழனியப்பா நர்சிங் ஹோம் பின்புறம், கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422-2233450, 2233850, மின்னஞ்சல் : sbi.10204@sbi.co.in

**கையகப்படுத்துதலுக்கான அறிவிப்பு**

[விதி 8(1)] (அசையா சொத்து குறித்து)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி, பிரிவு 13(12)-ன் கீழ் விதி 3-ன்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், கீழே கையொப்பம் செய்துள்ள **கோயம்புத்தூர், ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளை, பாரத ஸ்டேட் பாங்குவின்** அதிகாரபூர்வமான அலுவலர் கீழ்க்கண்டவர்களுக்கு **29.05.2026** தேதியில் ஒரு டிமாண்ட் நோட்டீஸ் வழங்கியுள்ளார். **கடன்தாரர்கள் : M/s. தி மெரிடியன் எஜுகேஷனல் சேரிட்டபிள் டிரஸ்ட்** என்பவர்களுக்கு நோட்டீசில் குறிப்பிட்டுள்ள தொகை **29.05.2026** தேதி அன்று **ரூ.10,77,76,265/– (ரூபாய் பத்து கோடியே எழுபத்து ஏழு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து இருநூற்று அறுபத்து ஐந்து மட்டும்)** மற்றும் **30.05.2026** தேதியிலிருந்து பின் வட்டி, பிற செலவுகளுடன், நோட்டீஸ் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

கடன் பெற்றுக் கொண்டவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் மேற்கண்ட தொகையை செலுத்தத் தவறிவிட்டதால், மேற்படி சட்டத்தின் செக்ஷன் 13(4), விதி 8-ன் கீழ், தனக்குள்ள அதிகாரப்படி, கீழ்க்கண்ட சொத்தினை **12.10.2026** தேதியில் வங்கியின் சார்பாக, வங்கியின் அதிகாரம் பெற்ற அலுவலர் கையகப்படுத்திக் கொண்டுள்ளார் என்பதைக் கடன்பெற்றவர்களுக்கும்/உத்தரவாதமளித்தவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களும், குறிப்பாகக் கடன் பெற்றவர்களும்/உத்தரவாதமளித்தவர்களும் இந்தச் சொத்தின் மீது எவ்விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாதென்றும், இச்சொத்தானது பாரத ஸ்டேட் பாங்குவிற்கு செலுத்த வேண்டியுள்ள தொகை **09.10.2026** தேதி அன்று, **ரூ.11,31,27,822/– (ரூபாய் பதினொரு கோடியே முப்பத்து ஒரு லட்சத்து இருபத்து ஏழாயிரத்து எண்ணூற்று இருபத்து இரண்டு மட்டும்)** மற்றும் **10.10.2026** தேதியிலிருந்து அதன் பின்வட்டிக்கும், செலவுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள பிணைக்கு உட்பட்டதென்றும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்கள்/உத்தரவாதமளித்தவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**சொத்தின் விவரம்**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு சார் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு தாலுகா, T. புதுப்பாளையம் கிராமம், திருமங்கலம் குரூப் கிராமத்தில் மறுசர்வே எண்.30/2ல் உள்ள 9 ஏக்கர் 46 சென்ட் விஸ்தீரண நிலம் மற்றும் மறுசர்வே எண்.13/1ல் உள்ள 28 சென்ட் ஆக மொத்தம் 9 ஏக்கர் 74 சென்ட் மொத்த விஸ்தீரண நிலத்தின் **எல்லைகள் : இனம் எண்.1 : மறுசர்வே எண்.30/2 நிலம் :** சர்வே எண்.13/1 மற்றும் சர்வே எண்.30/1 நிலங்களுக்கு வடக்கு, சர்வே எண்.14 நிலத்துக்குக் கிழக்கு, சர்வே எண்.28 மற்றும் சர்வே எண்.29 நிலங்களுக்குத் தெற்கு, சர்வே எண்.27 மற்றும் சர்வே எண்.28 நிலங்களுக்கு மேற்கு. **இனம் எண்.2 : மறுசர்வே எண்.13/1 நிலத்தின் எல்லைகள் :** சர்வே எண்.13/1ல் உள்ள C.P. லோகநாதன் சொத்துக்கு வடக்கு, தென்வடல் ஊராட்சி தார் சாலைக்குக் கிழக்கு, சர்வே எண்.13/1ல் உள்ள C.P. லோகநாதன் சொத்துக்குத் தெற்கு, சர்வே எண்.30/2 (முதல் இன) நிலத்துக்கு மேற்கு.

தேதி : 12.10.2026
இடம் : கோயம்புத்தூர்
அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு
சார்ப் (SARB), கோயம்புத்தூர்


# தவெக ஆட்சியில் பண வீக்கம், விலை உயர்வில் தமிழ்நாடு முதலிடம்

## மு.க.ஸ்டாலின் விமர்சனம்

**சென்னை, அக். 13:** தவெக ஆட்சியில் பண வீக்கம் மற்றும் விலைவாசி உயர்வில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

தவெக ஆட்சி அமைந்த நான்கே மாதங்களில் பண வீக்கத்திலும் விலைவாசி உயர்விலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இவர்களுக்கு, அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுக்குள் வைக்கத் தெரியவில்லை என்றால்கூட பரவாயில்லை. விலைவாசி உயர்வே ஏற்படவில்லை என உணவுத் துறை அமைச்சர் சொல்லும் வடிகட்டிய பொய்யைக் கேட்டுத்தான் பொதுமக்கள் இன்னும் எரிச்சலில் இருக்கிறார்கள்.

மின் வெட்டு குறித்தும் அனைத்து எதிர்க்கட்சிகளும் கடந்த பல மாதங்களாக எச்சரித்து வந்தோம். அப்போதே சுதாரித்து உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். இப்போது, கடைசி நிமிஷத்தில் கதவைத் தட்டி, யூனிட்டுக்கு ரூ.35-க்கு வெளிச்சந்தையில் வாங்கப் போகிறார்களாம்.



திமுக ஆட்சியில் குறைந்த விலைக்கு வாங்கிய ஒப்பந்தங்களை ரத்து செய்துவிட்டு, இந்தியாவிலேயே இதுவரை எந்த மாநிலமும் வாங்காத அதிக விலைக்கு வாங்குவதுதான் இவர்கள் கொண்டு வந்துள்ள மாற்றமா?

குறுவை பொய்த்த நிலையில், டெல்டா விவசாயிகளின் பேச்சைக் கேட்காமல், ஜோதிடரின் பேச்சைக் கேட்டு மேட்டூர் அணையையும் தவறான தேதியில் திறந்து வைத்தார்கள். இப்போது சம்பா சாகுபடியும் சாத்தியமாகுமா எனத் தெரியாமல் கடைமடை விவசாயிகள் நீரின்றிப் பரிதவிக்கிறார்கள்.

இப்படி நம் கண் முன்னே தமிழ்நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது. இவர்களை வழிநடத்த வேண்டிய முதல்வரோ மாதம் ஒரு ஊருக்குச் சென்று விழாவைச் சிறப்பிப்பதிலேயே குறியாக இருக்கிறார். மொத்தத்தில், ஆட்சி நிர்வாகத்தின் அடிப்படைகூட அறியாதவர்களின் அலட்சியத்தால் எதிர்வரும் மாதங்களை தமிழ்நாட்டு மக்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்ற அச்சம்தான் மேலோங்குகிறது எனத் தெரிவித்துள்ளார் மு.க.ஸ்டாலின்.


**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
கடன் வசூல் நிர்வாகக் கிளை : எண்.11/952, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர் - 641 012. போன் : 0422 - 2497178, மின்னஞ்சல் : iob1551@iob.bank.in

**அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு**

(பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) நிபந்தனையின் கீழ்)

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், வங்கிக்குப் பிணையப்பட்ட அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான பின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின்** (கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கபூர்வ சுவாதீனம்** செய்து கொள்ளப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள **கடன்தாரர்கள் : M/s. ரக்‌ஷிதா டெக்ஸ்டைல்ஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திருமதி.உமாமகேஸ்வரி,** க/பெ.திரு.P.S.சதீஷ் குமார், எண்.37, சொக்கநாத வீதி, ஈரோடு – 638 001 மற்றும் **உத்தரவாதமளித்தவர்கள்/அடமானதாரர்கள் : 1. திரு.M.P.சக்திவேல்,** த/பெ.திரு.K.M. பன்னீர்செல்வம், கதவு எண்.9, தில்லை நகர், IOB கோட்டை கிளை அருகில், ஈரோடு – 638 001, **2. திருமதி. R.சுபா,** க/பெ.திரு.M.P.சக்திவேல், கதவு எண்.9, தில்லை நகர், IOB கோட்டை கிளை அருகில், ஈரோடு – 638 001 ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய **12.10.2026 தேதி வரையான தொகை ரூ.5,95,52,281/– (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து இருநூற்று எண்பத்து ஒன்று மட்டும்)** நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் **11.11.2026** தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் அட்டவணைச் சொத்தின் கீழே தரப்பட்ட விபரப்படியாகும்.

**சொத்துக்கள் விபரம் : பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை / அசையாச் சொத்து.**

**திரு. M.P.சக்திவேல் மற்றும் திருமதி. R.சுபா ஆகியோருக்குச் சொந்தமான சொத்து. சொத்து ID – IOBARAKSHITHA02**

திரு.K.M.பன்னீர்செல்வம் மகன் திரு.M.P.சக்திவேல் மற்றும் திரு.M.P. சக்திவேல் மனைவி திருமதி.R.சுபா ஆகியோரது பெயரில் நாமக்கல் 638008, குமாரபாளையம் தாலுகா, பள்ளிபாளையம் – குமாரபாளையம் மெயின் ரோட்டில் ஜெயலட்சுமி தியேட்டர் எதிரில், குமரன் நகர், வார்டு எண்.2ல் க.ச.எண்.168/3, மறுசர்வே எண்.168/3B2ல் (பகமைமிகு பூமி) டைமாஷ் எண்.187ன் படி கதவு எண். 4, 447/1, 4, 447/2 முதல் 5 முடிய உள்ள காலி நிலம், 18041 ச.அடி விஸ்தீரணம் கொண்டுள்ளது.

இதில் **இனம் 1 சொத்து, திரு. M.P. சக்திவேலுக்குச் சொந்தமான 8485 ச.அடி விஸ்தீரண நிலத்தின் எல்லைகள் :** 30 லிங்க் அகலகிழமேல்வண்டித்தடத்துக்கு வடக்கு, திருமதி. R.சுபாவுக்குச் சொந்தமான சொத்துக்குக் கிழக்கு, ஓரக்குழிக்காட்டுக்குத் தெற்கு, P.ராஜாமணிக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு. **அளவுகள் :** கிழமேல் வடபுறம் 67 அடி 8 அங்குலம், கிழமேல் தென்புறம் 70 அடி 6 அங்குலம், தென்வடல் கிழபுறம் 115 அடி, தென்வடல் மேல்புறம் 130 அடி 6 அங்குலம்.

**இனம் 2 – திருமதி. R.சுபாவுக்குச் சொந்தமான 9556 ச.அடி விஸ்தீரண நிலத்தின் எல்லைகள் :** 30 லிங்க் அகல கிழமேல் வண்டித் தடத்துக்கு வடக்கு, திருமதி.ராஜாமணிக்கு சொத்துக்குக் கிழக்கு, ஓரக்குழிக்காட்டுக்குத் தெற்கு, திரு. M.P சக்திவேலுக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு. **அளவுகள் :** கிழமேல் வடபுறம் 67 அடி 8 அங்குலம், கிழமேல் தென்புறம் 70 அடி 6 அங்குலம், தென்வடல் கிழபுறம் 130 அடி 6 அங்குலம், தென்வடல் மேல்புறம் 146 அடி, ஆக இனம் 1 மற்றும் 2 சொத்தின் மொத்தம் 18041 ச.அடி நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள அனைத்து சிறப்பு கட்டுமானங்களும் பிறவும் சேர்ந்த சொத்து, 4வது வார்டு, பள்ளிபாளையம் அக்ரகார கிராம ஊராட்சியில் கதவு எண்.4–447, 4–447/2, 3, 4, 5, 6, 7 மற்றும் 8 உடன் உள்ளது.

**குறைந்தபட்ச விலை : ரூ.2,29,15,000/–** (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து ஒன்பது லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)
(பொருந்தும் TDS மற்றும் baanknet போர்டல் செலவுகள் உள்ளிட்டு).
**முன்வைப்புத் தொகை : ரூ.22,91,500/–** (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து ஐநூறு மட்டும்).
**ஏல உயர்வு மடங்கு: ரூ.1,00,000/–** (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)

வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL சட்டபூர்வ நிலுவைகளை விட வங்கியின் நிலுவைகளுக்கே முன்னுரிமை உண்டு.

**இ–ஏலத் தேதி/நேரம் : 11.11.2026 (புதன் கிழமை); காலை 10:30 மணி முதல் மதியம் 01:30 மணி வரை.** ஏலம் நிறைவடையும் வரை, ஒவ்வொன்றும் 10 நிமிட தன்னிச்சையான நீட்டிப்புடன் ஏலம் நடைபெறும் தளம் : **https://baanknet.com**

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட இ–ஏலத்தின் சேவையாளரின் **https://baanknet.com** 'லிங்க்'கில் அல்லது வங்கியின் **www.iob.in [https://www.iob.in/TenderDetails.aspx/Tendertype=E_Auction]** இணையதளத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 13.10.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/கள் ஆகியோருக்கான, மேற்படி கடனிற்காக மேற்படி தேதியில் நடைபெறும் இ–ஏலத்திற்கான, 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) / விதி 9(1) ன் கீழான அறிவிப்பாகவும் இதனைக் கொள்ள வேண்டியது.


# 'ஜெம்' வீரமணி 3-ஆவது வழக்கில் கைது: மேலும் 2 காவல் அதிகாரிகளிடம் விசாரணை

**சென்னை, அக். 13:** சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த விவகாரத்தில் ஜெம் வீரமணி மூன்றாவது வழக்கில் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரத்தில் மேலும் இரு காவல் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்தனர்.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக 'ஜெம்' கிரானைட் நிறுவன உரிமையாளர் வீரமணி மற்றும் அவரது உதவியாளர் சாந்தி, அவர் கணவர் மகேந்திர சிம்ஹன், கணேசன், கார் ஓட்டுநர்கள் லாசர், பார்த்திபன், பாபு ஆகியோர் ஆகியோர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த விவகாரம் குறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையர் தேன்மொழி தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்கின்றனர். ஜெம் வீரமணி மீது இதுவரை 10 சிறுமிகள் புகார் அளித்துள்ளனர். இதுவரை 7 வழக்குகள் வீரமணி மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

**வீரமணியிடம் பணம் பறிப்பு:** வீரமணி, சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்தது குறித்து 2025 அக்டோபரில் சென்னை காவல் துறையில் விடியோ ஆதாரத்துடன் புகார் செய்யப்பட்டது. ஆனால், புகாரின்பேரில் காவல் துறை வழக்குப் பதிவு செய்துவிட்டு, விடியோவில் இருப்பவர்கள் யாரேன்று தெரியவில்லை என்று வழக்கை முடித்து வைக்க முயன்றது. ஆனால், போக்ஸோ நீதிமன்றம், அதை நிராகரித்து விசாரணைக்கு உத்தரவிட்டது.

**உயர் அதிகாரிகளிடம் விசாரணை:** இந்த விவகாரத்தில் மேலும் துப்பு துலக்கும் வகையிலும், வழக்கை முடித்து வைக்க முயன்ற புகார் தொடர்பாகவும் காவல் துறை உயர் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக அப்போது சென்னை பெருநகர காவல் துறை ஆணையராக இருந்த ஏடிஜிபி ஏ.அருண், கூடுதல் காவல் ஆணையராக இருந்த ஐஜி கண்ணன் ஆகியோரிடம் சிறப்பு புலனாய்வுக் குழு 3 மணி நேரம் விசாரணை செய்தது.

இதன் தொடர்ச்சியாக அப்போது மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக இருந்த ஏ.ராதிகா, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு துணை ஆணையராக இருந்த வனிதா ஆகியோரிடம் விசாரணை நடத்தினர்.

**3-ஆவது வழக்கில் கைது:** இதற்கிடையே, ஜெம் வீரமணி மீது ஏற்கெனவே 2 வழக்குகளில் கைது நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், 3-ஆவது வழக்கில் செவ்வாய்க்கிழமை கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது. சிறப்பு புலனாய்வுக் குழு, தனது அடுத்தகட்ட விசாரணை அறிக்கையை அக்.27-ஆம் தேதி போக்ஸோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது.

# ஞானேஷ்குமாருக்கு எதிரான மனுவில் முதல்வர் விஜய் பெயர் இடம்பெறாதது ஏன்? திமுக கேள்வி

**சென்னை, அக். 13:** இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் 'இண்டி' கூட்டணி தலைவர்கள் பெயர்கள் இடம்பெற்ற நிலையில், தவெக தலைவரும், முதல்வருமான ஜோசப் விஜய் பெயர் இடம்பெறாதது ஏன் என்று திமுக கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து மத்திய சென்னை மக்களவை திமுக உறுப்பினர் தயாநிதி மாறன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டப் பதிவு:

எஸ்ஐஆர் விவகாரத்தில் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக இண்டி கூட்டணி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ், தேவஸ்வி யாதவ், மம்தா பானர்ஜி உள்பட 11 தலைவர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்த நிலையில், தவெக தலைவரும், முதல்வருமான விஜய் பெயர் இடம்பெறவில்லை.

பழக்க வழக்கமெல்லாம் பனையூருக்கு வந்து காபி சாப்பிடுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். பாசிச எதிர்ப்புக் கெல்லாம் என்னைக் கூப்பிடாதீர்கள் என விசிலடித்து அனுப்பிவிட்டாரா விஜய்?

காங்கிரஸ் உள்ளிட்ட துரோகிகள் கழன்று கொண்ட பின்பும், இடைத்தேர்தலில் திமுகவின் வாக்கு சதவீதம் அப்படியே இருப்பதைப் பார்த்து, நீங்கள் வாக்கு வங்கி இல்லாத கூட்டணி என்பதை முதல்வர் தெரிந்து கொண்டாரா? எனப் பதிவிட்டுள்ளார் அவர்.